



அமரர்

# இளையகுட்டி குணரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ம் நினைவு மலர்

15.03.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்/பன்னாலை தெல்லிப்பளையை
பிறப்பிடமாகவும்
கிளிநொச்சி/ இல:- 62ஸ்கந்தபுரத்தை
வதிவிடமாகவும்கொண்ட

# அமரர்
# இளையகுட்டி குணரத்தினம்

(பிரபல குடியேற்றக் கமக்காரன்)
அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்
## நினைவு மலர்

15-03-2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



வையத்து வாழ்வாங்கு
வாழ்ந்து தனக்கும் தன்குடும்பத்தார்க்கும்
உற்றார் உறவினர்களுக்கும்
உறுதுணையாக நின்று கடுமையாக
உழைத்து இப்பிரதேசத்தில் உணவு
தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக்
கமத்தொழிலை மிகவும் ஊக்கத்துடன்
முன்னின்று இப்பிரதேச குடியேற்ற
மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்து
அமரரான எங்கள் குலக்கொழுந்தான
எம் தெய்வத்திற்கு எமது சமர்ப்பணமாக
இந்நூலை முன் வைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

இவ்வண்ணம்
என்றும் நீங்காத எண்ணங்களுடன்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில்

13 - 01 - 1939



இறையுலகில்

14 - 02 - 2020

அமரர்

# இளையகுட்டி குணரத்தினம்

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

மேன்மை தரு விகாரி வருடம் தனில்வந்த
மிகு மாசிமாதத் தேய்பிறைச் சஷ்டி திதி தன்னில்
மாண்புமிகு மானிடன் மதிப்புமிகு குணரத்தினம்
தான் சென்றார் தலையிறைவன் தாள்காள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ம் ஆண்டு நினைவேந்தல்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



| இவ்வுலகில் | இறையுலகில் |
|---|---|
| 29 - 08 - 1972 | 13 - 04 - 2009 |

அமரர்

# திருமதி. சிவமதி ரவிக்குமார்

அவர்களின்

## திதி வெண்பா

சீர்திரு துலக்கும் சர்வதாரி பங்குனிதிங்கள்
நல்கிடும் அபரபக்க சதுர்த்தசி நாளில்
நீளும் புகழோடு சீருடன் வாழ்ந்த
சிவமதி என்னும் சீர்மகள் இறையடி சேர்ந்த தென்றரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்குங் செய்கருமங் கைகூட்டும் - செஞ்சொற்
பெருவாக்குங் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னுகாவரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொணடென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழ விடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடி எம்மானுக்கே.
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாமகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லை பொது நடம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர - எனவோதும்
முக்கட்பா மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமூ வர்க்கத் தமரரும் - அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் - இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பஷித்தொடு ரஷித்தருள்வதும் - ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு - கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக - எனவோத
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குககுக
குத்திப்புதை புக்குப் பிடியென - முதுகூகை
கோட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல - பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித வாழ்வின் எடுத்துக்காட்டான மனிதனாக வாழ்ந்து இறையடி சேர்ந்த அமரர் இளையகுட்டி குணரத்தினம் அவர்களின் வாழ்வின் ஒரு நோக்கு

இலங்கை மணித்திருநாட்டின் எழிலில் மிகு நித்திலமாக திகழ்ந்து விளங்குகின்ற முத்தான பிரதேசமான பாணனுக்கு பரிசாக கொடுத்ததும் கத்தும் கடலலை யோசையொடு வற்றாத நீர்பாயும் ஆறுகளும் குளங்களும் பெரும் தென்னை பனைமரச் சோலைகளும் மாபெரும் கோயில்களும் படித்த அறிஞர்,புலவர்கள்,பெரியோர்கள் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற யாழ்ப்பாண பிரதேசத்தில் அன்னை துர்க்காதேவி எழுந்தருளி அருள் மழை பொழிந்து கொண்டிருக்கும் தெல்லிப்பளை பகுதியில் பெருந்தோட்ட கமக்காரர்கள் வாழ்ந்து தம்தொழிலை இன்னும் மறவாமல் செய்து கொண்டிருக்கும் பழம்பெரும் கிராமமான பன்னாலையில் சீரும் சிறப்புடனும் அதிகாரத்துடன் வாழ்ந்து வந்த வன்னிராச பரம்பரையை சேர்ந்த பெரும்மகன் இளையகுட்டி விசாலாட்சி பிள்ளைக்கு 2வது மகனாக பிறந்தவர் தான் திருவாளர் குணரத்தினம் ஆவார். அவரின் உடன் பிறப்புகளாக திரு.பரரஜசிங்கம்,திலகவதி,சிவராசலிங்கம்,சண்முகலிங்கம், கௌரிதேவி,சுந்தரலிங்கம்,தர்மலிங்கம் பிறந்து வளர்ந்து வந்தார்கள்.திருவாளர் இளையகுட்டி ஐயா அவர்கள் ஒரு மேலான பெரும் முயற்சி உடைய பழம் பெரும் விவாசயி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

1962ல் ஆண்டு கிளிநொச்சி அக்கராயன் குளத்திட்டத்தின் கீழ் ஸ்கந்தபுரம் கிராமத்தில் அரசினால் வழங்கப்பட்ட குடியேற்ற திட்டக்காணியில் குடியிருப்பதற்காக விவசாயத்தில் மேற்கொண்ட அளவற்ற விருப்பினால் தனது தந்தையுடன் இக்காணியில் குடியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் வந்து குடியேறிய மக்களுடன் ஒன்றிணைந்து ஓர் இடத்தில் வனவிலங்குகளின் அச்சுறுத்தலுக்கான வாடிகள் அமைத்து தங்கிருந்து காடுகளை வெட்டி பண்படுத்தி மேட்டுக்காணி தோட்டபயிர்ச் செய்கையும் வயல்காணயில் நெற்பயிர் செய்கையும் செய்து வந்தார்கள். தகப்பனாரும் இவரும் ஊக்கமான விவசாயிகளாக திகழ்ந்தனர்.

இவர்களில் விசேட ஸ்தானத்தை பெற்றவர் அமரர் இளையகுட்டி குணரத்தினம் ஆவரர். இவர் தனது பிறப்பிடத்தில் வாழ்ந்த இராசசிங்கம் பரம்பரையில் வந்த சின்னத்தம்பு இராசாத்தி இன் மகளான இராஜபரமேஸ்வரி என்பவரை. 1971ல் திருமணம் செய்தார்.

இவர்களின் குடும்ப வாழ்வின் பிரதிபலனாக பிள்ளை செல்வங்களாக சிவமதி, கலாமதி, சுதாமதி, குகனேஸ்வரன், கோகிலமதி ஐவர் தோன்றினர் தம் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டியதோடு நற்தொழிலை பழக்கியும் பொருத்தமான இடத்தில் திருமணம் செய்துள்ளார். மூத்தமகள் சிவமதியை ரவிக்குமாருக்கு மணம் முடித்து- யசோதரன், விதுஷன், லதுர்சன் மகளான கலாமதியை சண்முகநாதனுக்கு மணம்முடித்து- வானதி, சுவாதி, ஆரதி யையும், அடுத்து மகளாகிய சுதாமதியை கமலநாதனை மணம் முடித்து- அபிஷா, நிவேதிகா, ஆரணி யையும், அடுத்து ஒரே மகனான குகனேஸ்வரனை சுபாஜினிக்கு மணமுடித்து- அக்ஷனா வையும். அடுத்து இளைய மகளாகிய கோகில மதியை ராஜகுமாருக்கு திருமணம் செய்து வைத்து- கவிந்தன், கம்சிகன், அதுஷன் ஆகிய பிள்ளைகளை பேரப்பிள்ளைகளாக கண்டு மகிழ்ந்தார். தம் பிள்ளைகளோடு பற்று கொண்டவர். ஒரே ஆண் மகனான குகனேஸ்வரன் என்பவரில் அதிக பாசம் உடையவர். ஒற்றுமையாக பிள்ளைகளின், உறவினர்களின் வாழ்வின் உயர்வுக்கு உதவினார்கள் என்பது அறிந்த விடயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர் குணரத்தினம் அவர்கள் கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள வயல் தோட்டங்களில் விவசாயத்தை மேற்கொண்டு உச்சவளைவை தமது முயற்சியால் பெற்று வந்தார் அது மட்டுமின்றி கண்ணகைபுரம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வந்தார்.

சைவசமய வழிபாடுகளில் அதிக அக்கறையுடைவர். ஆலயங்களில் நிர்வாக உறுப்பினராக இருந்து ஆலயங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். கந்தபுரம் மட்டுமல்லாது உருத்திரபுர சிவன் கோவில் நிர்வாக உறுப்பினராக நீண்ட காலமாக இருந்து வந்தார். குலதெய்வமாகிய ஸ்கந்தபுரம் இத்தியடி நடனமுத்துமாரி அம்மன் ஆலய வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற உதவிகள் செய்து வந்தார். மேலும் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்கள், அன்னதான நிகழ்வுகளையும் சிறப்பாக செய்வார்.

குணத்தார் என்று எல்லோரிடனும் அன்பான அழைக்கப்பெறும் இவர் வயல் தொழிலுக்காக நல்ல தரமான மாட்டு வண்டியை வைத்திருப்பார்.நெல் வயலுக்கும் தோட்டங்களுக்கு செல்வதற்கும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் மாட்டு வண்டியை பயன்படுத்துவார் மாட்டு வண்டியின் ஆசனத்தில் நிமிர்ந்து நோத்தியாக அமர்ந்திருந்து தோளில் சால்வையை இட்டுக்கொண்டு செல்லும் போது ஓர் எழுச்சியும் கவர்ச்சியும் இருக்கும்.இங்கு உற்பத்தியாகும் மரக்கறி வகைகளை மாட்டு வண்டியில் ஏற்றி கிளிநொச்சி சந்தைக்கு செல்வது வழக்கம் திரு குணத்தினம் அவர்கள் இப்பிரதேசத்தில் விவசாய கூட்டம் நடைபெறும் போது வரும் உத்தியோத்தர் அவர்களுக்கு அன்புடன் உணவு அளிப்பார். சிறந்த விவசாயி என்றும் நெற்செய்கைக்காக கடந்த காலத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த இராசநாயகம் அவர்களிடம் பரிசில்களை பெற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூர் மக்களோடும் இன்ப துன்பங்களில் கலந்து பல உதவிகளை செய்து வந்துள்ளார். மேற்கெண்ட சிறப்பு வாய்ந்த இம்மனித கடவுள் எதிர்பாராத விதமாக கடந்த 10 வருடகாலமாக நோய்வாய்ப்பட்டு இன்லுற்று பிள்ளைகளால் நன்கு பராமரிக்கப்பட்டு வந்த வேளையில் திடிரென 14-02-2020 அன்று இறையடி சேர்ந்து விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகையா மகேந்திரன் ஓய்வு பெற்ற
# நிர்வாக கிராம அலுவலர்
# 108,ஸ்கந்தபுரம்,கிளிநொச்சி.

அக்கராயன் குடியேற்ற திட்டத்தின் கீழ் 1962ம் ஆண்டு குடியேறிய எனது மாமனர் கமவிதனை பொன்னையா மற்றும் விவசாய குடிமக்களுடன் வாழ்ந்த முதுபெரும் விவசாயி குணரத்தினம் அவர்களை எனது சேவைக்காலமான 30 வருடகாலமாக நன்கு அறிவேன். இறுக்கமான கட்டான உடல் அமைப்புடன் கட்டளைகளுடன் வாழ்ந்த இரும்பு மனிதன் என்றே நான் அழைக்கும் இவரை என்றும் நான் மறக்க முடியாது. ஒரு பலம் நிறைந்தவரும் அன்பு உள்ளம் கொண்டவரும். சிறந்த விவசாயியுமான திருவாளர் குணரத்தினம் ஐயா அவர்களின் மறக்க முடியாதும் பல ஆலய பூசை வழிபாடுகள் அன்னதான வழிபாடுகள் விவசாய அபிவிருத்தி செயற்பாடுகள் பண்பு உள்ளவராவர். வருகின்ற விருந்துனர்களுக்கு விருந்து தோம்பல் போன்றனவாகும். இப்பெயர் பட்ட சிறப்பான தெய்வமகனின் இழப்பு ஈடு செய்ய முடியாது ஒன்றாகும் அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் அவரின் மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளை யாவருக்கும் னெது ஆறுதல்கள் தெர்வித்துக் கொள்கின்றோம்.

**க. மகேந்திரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பாவிற்கு....

அன்பின் பெரும் பாசத்திற்கும் உரிய எனது அப்பாவிற்கு சிறுவயதில் இருந்து எனக்கு தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற வாக்குக்கு இணங்க எனக்கு பல கமத்தொழில்கள் என்பவற்றை பழக்கி தந்தவர் எனது அப்பா. அம்மா பொது வேலைகள், என்பவற்றில் பெரிதும் ஆர்வம் கொண்டவர். இவர் பல இடங்களில் மரக்கன்றுகள் நாட்டி உள்ளார். இதற்கு உதாரணமாக கண்கைபுரம் பாடசாலையில் தென்னம் மரம், கன்று இருப்பது சான்றாக உள்ளது. அப்பா கோயில்கள் தோறும் தொன்றுகள் செல்வது வழக்கம்.

இவர் பல விவசாயப் போட்டிகளில் பங்குபற்றி வேளாண் மன்னன் விருதுகளை வென்று உள்ளார். இவ் விருதுகளில் இன்றும். நான்தலைமுறையாக வென்று வருவதற்கு அப்பாவே வழிகாட்டியாக உள்ளார். அப்பா என்னை பெயர் சொல்லி கூப்பிடுவதே இல்லை.

தம்பி என்று என்னை செல்லமாக கூப்பிடுவார் என்னை சிறுவயதில் மார்போடு அணைத்து தான் நித்திரை கொள்வார். அப்பாவின் ஆத்மா இறையடி சேர வேண்டும் என்று இறைவனை பிரதித்து அவர் செய்யும் அறபணிகளில் நானும் தலைமுறையாக செய்வேன் என்று கூறிகொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகன்

கு. குகனேஸ்வரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவர் பெருமகனார்
## இளையகுட்டி குணத்தார்

**"சுழன்றும் ஏர்பின்னது உலகம் – அதனால்
உழன்றும் உழ வேதலை"**

இளையகுட்டி குணத்தார்ஸ்கந்தபுரம் கிராமத்தின்
மூத்த குட்டி விவசாயி
அறுபத்து இரண்டாம் ஆண்டுமுதல் அறுபத்து இரண்டாம்
இலக்கக்காணியில் இருந்து அயராது உழைத்தவர்.
அன்பான மனிதரிவர் அயலவரை நேசிப்பவர் கடமை தவறாத
கண்ணியவான் இவர்.
காடு வெட்டி களனி ஆக்கி சேறுமிதித்து சோறு போட்ட பொன்னேர்
உழவர் இவர்.
அள்ளிக்கொடுப்பதில் அமுதசுரபி கோபப்படாத மனிதன் அதனால்
தான் இவர் பெயர் குணம் கோயில் தொண்டில் இவருக்கு கொடிய
ஆர்வம்.
பூமிக்கு இவர் ஒரு புதுப்புரட்சி இவர் கண்ணகை புரத்தில் நட்ட
மரங்கள் இதற்கு சாட்சி
மாவட்டம் அறிந்த விவசாயி
விவசாய மன்னர் இவர்
கரைஎழில் சஞ்சிகையில் கணேசரின்கதையில்
இவர் கதாநாயகன் இவர் வாழ்வு இங்கு ஒருபுத்தகம்
இதுதான் இவர் எதிர்காலத்தில் விட்டுச்சென்ற சொத்து
இகம் வென்றவர் இறையடியில் இன்புற்றிருக்க பிராத்திப்போமாக

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



குமாரசாமி
துஸ்யந்தன்
கிராம அலுவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாய பொருட்களை ஏற்றி, இறக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லையிலும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே
எல்லைமறுவாய் நெறிஅளிக்கும்
வாதவூரன் என்கோன்திருவாசகம் எனும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் னடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையாடி போற்றி!
தேச னடி போற்றி சிவன்சே வடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடி போற்றி!
ஆராத இன்பம் அருளு மலை போற்றி!
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பொருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளதுள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் பெருமாளே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பருக்கும் எங்கள் பொருமள்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பொருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேங்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்பரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராத அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கண்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை பெருமையனே
கூர்த்த மெய்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர் வுமிலாப் புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்த வினைப்பிறவி சாராமே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லி பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கிழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சி
பதிப்போர்க்குச் செவ்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடந்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தமும் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுடிகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக்குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் லிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வருகவேல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வலாஷ்டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியயும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரம ராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல சேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளென்னைக் கண்டாறகலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியனில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
விடு விடு வேலை வெருண்டதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விகூஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விகூஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குண்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து றை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்க்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியான் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சக்ஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சக்ஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தெனது உள்ளம் அக்ஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேம்வர்க்கு உவந்(து) அமுது அழித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்(கு) ஓர் அரசே!
மயில்நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

-கவசம் முற்றிற்று-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கள்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மே நின்றும் புரண்டிங்கண்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதி கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப்போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ஈசனார்க் கன்பர்யா மாரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந் தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவர் சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உ_ன்னெக்குநின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலாறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தொன்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழிப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுண் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமோலொ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழ்ந்தோங்கா யாராழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமுருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாயாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெருந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
- தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பார்
லெங்கு மிலோாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குதம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலத்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணார ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரொம்பாவாய்.18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்னுதியேல்
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றியருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சி

## திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே புலர்ந்தது
பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திலுப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலர் மற்றண்ணல ங்கண்ணாம்
திரல்நிரை அறுபதம் முரல்வற இறையோர்
திருப்பெருந்துறையுரை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளியெழுந் தருளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பினசங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற்செறிகழற் றாளினை காட்டாய்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயல்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையார் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே.

பூதங்கள் தோறு நின் றாய் எனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவரைச்
சீதங்கொள் வயல் திருப்பெருத்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
எதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம் பெருமான் பள்ளியெழுந்தருளாயே.

பப்பற வீட்டிருந்துணரும் நின்னடியார்
பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்
மைப்புற கன்னியர் மானிடத்தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளர்
செப்புறு கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமபன் பள்ளியெழுற்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபழச்சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கையுள்ளாய் திருப்பெருந்துறையுறை மன்னா
எது எமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே.

முந்நிய முதல்நாடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்தணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தோறும் எழுந்தருளியே பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருபெருந்துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆரமுதே பள்ளியெழுந்தருளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உனதொழும்படி யோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச்செய்தானே
வன்திருப்பெருந்துறையுறையாய் வழியடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும்படியார்
எண்ணகத்தாய் உலகுக்குயிரானாய்
எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே.

புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய் திருமாலாம்
அவன் விரும்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளியெழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## சிவதுதி

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது [திருமுறை-08]**

**தலம்:- தில்லை**

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியில் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின் எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மிண்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம் புகழ்ந் தாடும்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.. 4

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருமகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்து நாமே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாம்மெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடகம் மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நன்மையின்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 8

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிபொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன் எம்ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிஇத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இன்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
போற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்னைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிச்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினாருக்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிகாப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாயப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிடாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பை புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்கதிலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறமால்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

கலைகளை உணர்விக்கும் அம்மை
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகலகலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பணுவற்றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை நோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாளினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதங் கேர கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தேன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பணுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பாலமுதந்தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே!

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்கங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே!

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடிடீயோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத்தானே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டே னும் விளம்பினுள் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத் கீதை

மான அவமானங்கள், ஏமாற்றங்கள்
தோல்விகள், நிலை குலைந்து
போக குலைந்து, போக செய்யும் கால
சூழ்நிலைகள், நம்பிக்கை, துரோகங்கள், செய்யும்
காரியத்தில் நட்டம், வஞ்சம் சூழ்ச்சிகள்,
எதிர்ப்புகள், உறவினர், நண்பர்களின்
சூதுகள், அன்பின் இழப்புகள், இவை
அனைத்தும்,மானிட வாழ்வின் அன்றாட
நிகழ்வுகள், இது போன்ற போராட்டங்களை
மன உறுதியுடனும், துணிச்சலுடனும் எதிர் கொள்கின்ற மனிதன்
எவனோ அவனே மிகச்சிறந்த பராக்கிரமம் பொருந்திய
வெற்றியாளனாக திகழ்கிறான்.

## கண்ணீர் துளிகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1939 - 01 - 13 |  | 2020 - 02 - 14 |

சிறிதரன் இராஜகுமார் அவர்களின் அன்பு மாமனார்
அமரர்
இளையகுட்டி குணரத்தினம்

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளிவிளக்கே!
உற்றவர் சுற்றமும்
கூடிக் களித்த உறவுகளைக்
கைவிட்டுச் சென்றதேனோ?
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்களைத்
தேற்ற மொழியின்றி
தவிக்கின்றோம் நாமெல்லாம்....

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரது குடும்த்தாருடன் இணைந்து நாமும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரத்தியேக செயற்கை முறை சினைப்படுத்துனர்
கால்நடை வைத்திய நிலையம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1939 - 01 - 13



இறப்பு 2020 - 02 - 14

ஸ்கந்தபுரம் இல 62 இனை வசிப்பிடமாகவும்
கொண்டவரும் மூத்த விவசாயியுமான

அமரர்

**இளையகுட்டி குணரத்தினம்**

கண்கள் கலங்குகிறது
காற்று வீசு மறுக்கிறது
உம்மறைவுச் செய்தி கேட்டு
நெஞ்சம வெடிக்கிறது
கதறி அழும் உம் உறவுகளுக்கு
இனி ஆறுதல் சொல்ல யாருண்டு

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!**

**பிள்ளையார் கமக்கார அமைப்பு**
**விவசாயிகளும்**
**ஸ்கந்தபுரம்.**

# கண்ணீர் துளிகள்

தோற்றம் 1939 - 01 - 13



மறைவு 2020 - 02 - 14

ஸ்கந்தபுரம் கிழக்கு மாதர் சங்க செயலாளர்
திருமதி ரா.கோகிலமதி அவர்களின்
தந்தையாரான

அமரர்

**இளையகுட்டி குணரத்தினம்**

கண்கள் கலங்குகிறது
காற்று வீச மறுக்கிறது
உம் மறைவுச் செய்தி கேட்டு
நெஞ்சம் வெடிக்கிறது
கதறி அழும் உம்உறவுகளுக்கு
இனி ஆறுதல் சொல்ல யாருண்டு

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
அவரது குடும்த்தாருடன் இணைந்து நாமும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

***மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்***
***ஸ்கந்தபுரம் கிழக்கு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1939 - 01 - 13

மறைவு 2020 - 02 - 14



இந்தியடி அம்மன் ஆலய திருவிழா உபயகாரரும்
ஆலயத்தின் ஆரம்ப கால உறுப்பினரும், அம்பாளின்
தீவிர பக்தருமான

அமரர்

**இளையகுட்டி குணரத்தினம்**

இன்று வானம் அழும்
வளிமண்டலம்
சோகத்தால் நிரம்பும்
இடியோடு மழை கேட்கும்
நான்கு பக்கமும் நீங்கள் தேடிய
உறவுகள் உம்மைத் தேடி வரும்
மரணம் உமக்கு முடிவல்ல
உம் நினைவுகள் நீங்காமல் என்றும்
நிலைத்திருக்கும் எம் மனதில்

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இந்தியடி அம்மன் ஆலய
பரிபாலன சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1939 - 01 - 13

இறப்பு 2020 - 02 - 14



ஸ்கந்தபுரம் இல 62 இனை வசிப்பிடமாகவும்
கண்ணகைபுரம் மூத்த விவசாயியுமான

அமரர்

காணாத உலகிற்கு
கரைந்து போன கற்பூரமே
மன்னோடு உம் பூவுடல்
மறைந்து விட்டாலும்
உம் நீங்காத நினைவுகளை
மனதில் சுமந்தபடி
துயர் பகிர்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்ணகைபுரம் கமக்கார அமைப்பு
கண்ணகைபுரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது அன்புடையவரானதும், தெய்வ ஸ்தானத்தில் உள்ளவருமான இளையட்குட்டி குணரத்தினம் அவர்களுடன் அன்பாகப் பழகிய சகலருக்கும் அவர் நோய் வாய்ப்பட்டுருந்த போது வந்து பார்த்து ஆலோசனையும் ஆறுதலும் கூறியவர்க்கும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிபுரிந்த உறவினருக்கும், சுற்றத்தாருக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டு மரியாதையை செலுத்தியவர்க்கும் வெளிஊரில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உறவினர்களுக்கும் மலர்மாலை கண்ணீர் அஞ்சலி, பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் இரங்கல் உரை ஆற்றியவர்க்கும், அந்தியேட்டி கிரியைகளில் ஆத்மா சாந்தி பிராத்தனைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், இம் மலரினை அச்சிட்டு தந்த தமிழரசன் பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்





* அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

## சின்னக்குட்டி இளையகுட்டி

தமிழரசன் பதிப்பகம் 0770790818.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org